DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.24/2025

**prosecution witness: LW–1 as PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஐஸ்வர்யா | தொழில் | : | தனியார் வேலை |
| க/பெ. | : | குமரேசன் (லேட்) | வயது | : | 27 |
| ஊர் | : | சேதுபதி நகர், அக்காள்மடம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**17.12.2025**

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது சேதுபதி நகர், அக்காள்மடத்தில் எனது அம்மாவுடன் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன நபர் குமரேசன் என்பவர் எனது கணவர். எங்களுக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளது. எனது கணவர் கொத்தனார் வேலை செய்து வந்தார். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் கடந்த 16.11.2024 ம் தேதி அன்று மதியம் பாம்பனுக்கு வீட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு சென்றுவிட்டார். எனது மாமா முருகேசன் என்பவர் எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு ஆஜர் எதிரியான அந்தோணி பீட்டர் என்பவர் கவனக்குறைவாக தனது இருசக்கர வாகனத்தை ஓட்டி எனது கணவரின் இருசக்கர வாகனத்தில் மோதியதால் விபத்து ஏற்பட்டதாகவும் அதில் எனது கணவருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டதாக கூறினார்.

2. எனது கணவரை ஆட்டோவில் பாம்பன் மருத்துவமனக்கு அழைத்துச் செல்வதாக கூறினார். நான் மருத்துவமனை சென்றபோது எனது கணவருக்கு சிகிச்சை அளித்து பின்னர் இறந்துவிட்டார். பின்னர் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு போஸ்மார்ட்டம் செய்வதற்கு எடுத்துச் சென்றோம். எதிரி மீது பாம்பன் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.12.17 10:22:26 +0530